www.Padasalai.Net www.TrbTnpsc.com

QL

6 - ஆம் வகுப்பு

காலம் : 2.00 மணி

# முதல் பருவத் தேர்வு - 2024

# சமூக அறிவியல்

மதிப்பெண்கள் : 60

## பகுதி - I

I அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 20 X 1 = 20

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. ஆற்றங்கரைகள் நாகரிகத்தொட்டில்கள் என அழைக்கப்படக் காரணம்
   அ) மண் மிகவும் வளமானதால் ஆ) சீரான காலநிலை நிலவுவதால்
   இ போக்குவரத்திற்கு பயனுள்ளதாக இருப்பதால்
   ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்
3. சூரியக் குடும்பத்தின் மையம்
   அ) சூரியன் ஆ) பூமி இ விண்மீன் ஈ) வியாழன்
4. ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் அவர்கள் எழுதிய புத்தகம் / புத்தகங்கள்
   அ) இந்தியா 2020 ஆ) அக்னிச் சிறகுகள்
   இ எழுச்சி தீபங்கள் ஈ) இவை அனைத்தும்

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

5. அசோகச் சக்கரத்தில் ...................... ஆரக்கால்கள் உள்ளன.
6. ...................... தானியங்கள் சேகரித்து வைக்கப் பயன்பட்டது.
7. கோயில்களின் நகரம் என அழைக்கப்படுவது ...................... .
8. பெருங்கடல்களில் மிகப்பெரியது ............. .

இ) சரியா? தவறா?

9. அசோகரது காலத்தில் புத்தசமயம் நாடு முழுவதும் பரவியிருந்தது.
10. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு.
11. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
12. தீவுக் கண்டம் என அழைக்கப்படுவது ஆஸ்திரேலியா.

ஈ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 13. கோட்டை | - | மீன்பிடித்தல் |
| 14. மரியானா அகழி | - | சட்டத்தின் முன் அனைவரும் சமம் |
| 15. கடற்கரை பகுதிகள் | - | மேடான பகுதி |
| 16. பிரிவு - 14 | - | பசுபிக் பெருங்கடல் |

உ) பொருந்ாததை எழுதுக.

17. காளைகள், ஆடுகள், எருதுகள், குதிரைகள்.
    ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, இலங்கை.

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**ஊ) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

19. *கூற்று :* பூம்புகார் நகரத்திலிருந்து அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதியும், இறக்குமதியும் நடைபெற்றது. *காரணம் :* வங்காள விரிகுடா கடல் போக்குவரத்திற்கு ஏதுவாக அமைந்ததால் அண்டை நாடுகளுடன் வணிகம் சிறப்புற்று இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று தவறு, காரணம் தவறு

20. *கூற்று 1 :* புவி, நீர்க்கோளம் என அழைக்கப்படுகிறது.
*கூற்று 2 :* புவி தன் அச்சில் சுழலுவதால் பருவகாலங்கள் ஏற்படுகின்றன.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
இ) இரண்டு கூற்றுகளும் சரி ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு

## பகுதி – II

**II எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி.** 6 X 2 = 12

21. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய சில கருவிகள் சிலவற்றைக் கூறு.
22. மனிதர்கள் ஏன் இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள்?
23. நாம் உண்ணும் உணவில் வேகவைத்த உணவு, பச்சையான உணவு என ஒரு பட்டியலை உருவாக்குக.
24. தமிழகத்தின் பண்டைய நகரங்களை குறிப்பிடுக.
25. உட்புறக் கோள்களைப் பெயரிடுக.
26. ஒரு நாட்டின் பெயரைக் கொண்டுள்ள கண்டம் எது?
27. இந்தியா ஏன் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிறது?
28. பாகுபாடு என்றால் என்ன?
29. இந்திய அரசியலமைப்பின்படி எந்தப் பிரிவுகள் சமத்துவத்தைப் பற்றி கூறுகிறது?
30. இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்றைப் பற்றி விவரி.

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

## பகுதி – III

**IV விரிவான விடையளி.** 4 X 5 = 20

31. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை? *(அல்லது)*
பழங்கால வேட்டை முறைகளை விளக்கி கூறவும்.
32. சிந்துவெளி நாகரிகம் ஒரு நகரநாகரிகம் காரணம் கூறு. *(அல்லது)*
மதுரையை ஆண்ட தமிழ் மன்னர்கள் பற்றி குறிப்பிடுக.
33. புவிக்கோளங்களின் தன்மைகள் பற்றி விவரி. *(அல்லது)*
சமவெளி மக்கள் நெருக்கம் மிகுந்ததாகக் காணப்படுகிறது. காரணம் கூறு.
34. இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை என்ற நாடாக இருப்பினும் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். – விளக்குக. *(அல்லது)* இந்திய சமுதாயத்தில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டை நீக்குவதற்கான தீர்வுகளை விவரி.

## பகுதி – IV

**V வரைபடத்தில் குறிக்கவும்.** 2 X 4 = 8

35. **அ) கீழ்க்காணும் இடங்களை தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.**
1) மதுரை 2) காஞ்சிபுரம் 3) பூம்புகார் 4) அரிக்கமேடு

**ஆ) கீழ்க்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**
1) பசுபிக் பெருங்கடல் ஆ) ஆசியா 3) இந்தியப் பெருங்கடல் 4) ஆப்பிரிக்கா.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com